சுருக்கம்

ஆளுநர் உரை மற்றும் சட்டப்பேரவை அறிவிப்புகள் – வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத குடும்பங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இலவசமாக வழங்கும் திட்டம் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தகவல் தொழில்நுட்பவியல் (மிஆ–2) துறை

அரசாணை (நிலை) எண். 3 நாள்: 20-06-2006

ஆணை :

மகளிருக்கு பொழுது போக்கிற்காகவும், அவர்கள் பொது அறிவு பெறவும் வீடுதோறும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி அவை இல்லாத குடும்பங்களுக்கு வழங்க இந்த அரசு கருதியுள்ளது.

2. எனவே, இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம் குறித்து பின்வரும் ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

1) தமிழ்நாட்டில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத குடும்பங்களுக்கு 14" வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இலவசமாக வழங்கப்படும். இந்த வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வருவாய் துறை மூலம் அந்தந்த மாவட்ட ஆட்சியரால் விநியோகிக்கப்படும்.

2) சட்டமன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்படும். இந்த குழு கீழ்க்கண்டவற்றை பரிசீலித்து ஆலோசனைகளை வழங்கும்:

(1) பயனாளிகள் தேர்விற்கான நெறிமுறைகள்
(2) தொலைக்காட்சிப் பெட்டிக்கான விவரக்குறியீடு
(3) ஒப்பந்தப்புள்ளி வரைவு ஆவணம்
(4) டெண்டர் டிரான்ஸ்பரன்சி சட்டப்படி கொள்முதலுக்கு பின்பற்றப்படும் செயல்முறைகள்
(5) தொலைக்காட்சிப் பெட்டி விநியோகம்
(6) திட்ட அமலாக்கம்
(7) 2006ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் இத்திட்டத்தைத் துவங்குவது.

3) பயனாளிகளைத் தேர்வு செய்ய கீழ்க்கண்டவாறு குழுக்கள் அமைக்கப்படும்.

ஊராட்சி

(1) ஊராட்சித் தலைவர் – தலைவர்
(2) கிராம நிர்வாக அலுவலர் – உறுப்பினர்–செயலர்
(3) பள்ளித் தலைமை ஆசிரியர் – உறுப்பினர்
(4) மக்கள் நலப்பணியாளர் – உறுப்பினர்

மாநகராட்சி/நகராட்சி/சிறப்பு ஊராட்சி

(1) வார்டு உறுப்பினர் – தலைவர்
(2) வரித்தண்டலர் (Bill Collector) – உறுப்பினர்
(3) வருவாய்த் துறை அலுவலர் – உறுப்பினர்–செயலர்
(4) பகுதிசார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர் (அரசு /மாநகராட்சி/நகராட்சி) – உறுப்பினர்

மேற்கூறிய குழுக்களில் எந்த நிலையிலும் போதிய அலுவலர்கள் இல்லையெனில், அந்தந்த மாவட்டத்திலுள்ள மற்ற துறை அலுவலர்களையும் நியமிக்க மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. இந்தக் குழுக்கள், தேர்வுக்கான நெறிமுறைகளைப் பின்பற்றி நிலைவழுவாது செயல்பட்டு குறிப்பிட்ட கால அளவிற்குள் பயனாளிகளின் பட்டியலைத் தயாரித்து, மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிவைக்கும்.

4) தொலைக்காட்சி பெட்டிக்கான குறியீடுகளை (generic specification) மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு ஒரு நிபுணர் குழு அமைக்கப்படுகிறது.

1. செயலர், தகவல் தொழில்நுட்பவியல்துறை – தலைவர்
2. சென்னை ஐ.ஐ.டியைச் சேர்ந்த பேராசிரியர் – உறுப்பினர்
3. அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர் – உறுப்பினர்
4. கன்சியூமர் எலக்ட்ரானிக்ஸ் அண்டு டெலிவிஷன் மான்யூபாக்சரர் அசோசியேஷன் பிரதிநிதி – உறுப்பினர்
5. மேலாண்மை இயக்குநர், எல்காட் – உறுப்பினர்–செயலர்

5) வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை கொள்முதல் செய்யும் பொறுப்பு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் (ELCOT) ஒப்படைக்கப்படுகிறது. அந்நிறுவனம் வெளிப்படையான, உலக அளவிலான ஒப்பந்தப்புள்ளி கோரி கொள்முதல் செய்ய வேண்டும்.

6) வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை பெயர் ஏதுமின்றி கொள்முதல் செய்து, அதில் "அரசின் கோபுரச் சின்னம்" மற்றும் அதையொட்டி "தமிழக அரசு வண்ணத் தொலைக்காட்சி" என்று பெயர் பொறிக்க வேண்டும்.

7) டெண்டர் டிரான்ஸ்பரன்சி சட்டத்தின்கீழ் அனைத்து நெறிமுறைகளையும் கடைபிடித்து தொலைக்காட்சிப் பெட்டிக்கான குறைந்த விலை நிர்ணயிக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் சேவை மற்றும் பழுதுபார்க்கும் மையங்களை அமைக்க வேண்டும்.

8) தொலைக்காட்சிப் பெட்டிகளை சுதந்திரமான மூன்றாம் நிலையாளரால் பரிசோதிக்க எல்காட் நிறுவனம் ஏற்பாடு செய்ய வேண்டும்.

9) இத்திட்டத்தின்கீழ் விநியோகிக்கப்படும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இது குறித்த ஆணை வணிகவரி மற்றும் பதிவுத் துறையால் தனியே வெளியிடப்படும்.

10) இத்திட்டம் தொடர்பான செலவினங்களுக்கு 2006–2007 வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.1889/FS/P/06, நாள் 17–6–2006–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எல்.கே. திரிபாதி,
தலைமைச் செயலாளர்

பெறுநர்
நிர்வாக இயக்குநர், எல்காட் நிறுவனம், சென்னை 35.
ஊரக வளர்ச்சித் துறை சென்னை 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை 9.
வணிக வரி மற்றும் பதிவுத் துறை, சென்னை 9.
வருவாய் துறை, சென்னை 9.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை 9.
பள்ளிகல்வித்துறை, சென்னை 9.
ஆணையர், வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, சென்னை 5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
மாநில கணக்காயர், சென்னை 18 ( 3 நகல்கள்).
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை 35.
சம்பள கணக்கு அலுவலர் (தலைமைச் செயலகம்) சென்னை 9.
நகல்:
முதலமைச்சரின் செயலாளர், சென்னை 9.
நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை 9.
உள்ளாட்சித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை 9.
நிதி (தொழில்/வரவு செலவு) துறை, சென்னை 9.
தலைமைச் செயலரின் தனிச்செயலர், சென்னை 9.
நிதித்துறை செயலரின் தனிச்செயலர், சென்னை 9.
இ. கோ. /உ.ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்